பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**10 01 2026** **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி குஜராத்தில் நடைபெறும் சோம்நாத் **Swabhiman** நிகழ்ச்சியில் கலந்துகொண்டுள்ளார்.

2. மாநிலத்தின் வளர்ச்சியில் சட்டம் — ஒழுங்கு முக்கிய பங்கு வகிப்பதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில், மாநில மற்றும் யூனியன் பிரதேச நிதியமைச்சர்களுடன் பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனை கூட்டம் இன்று நடைபெற்றது.

4. ஈரானில் அரசுக்கு எதிரான போராட்டம் 14-ஆவது நாளாக இன்றும் தொடர்கிறது.

5. மணிலா பனிச்சறுக்குப் போட்டியில் இந்தியா 15 பதக்கங்களை வென்றுள்ளது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி குஜராத் மாநிலம் சோம்நாத் **Swabhiman** நிகழ்ச்சியில் கலந்துகொண்டுள்ளார்.

**Prabhas** பட்டினத்தில் நடைபெறும் நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக ஆலய வளாகத்தில் ஓம்கார் ஜெபத்திலும் பிரதமர் கலந்துகொள்கிறார்.

நாளை சோம்நாத் மகாதேவ ஆலயத்தில் வழிபாடு செய்யும் பிரதமர், **Shaurya** யாத்திரையிலும் பங்கேற்கிறார்.

பின்னர் சோம்நாதில் நடைபெறும் பொது நிகழ்ச்சியில் பிரதமர் உரையாற்ற உள்ளார்.

<<<<<>>>>>>

மாநிலத்தின் வளர்ச்சியில் சட்டம் — ஒழுங்கு முக்கிய பங்கு வகிப்பதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

ஜெய்பூரில் இன்று காவலர்கள் பணி நியமன விழாவில் பேசிய அவர், மாநிலத்தில் சட்டம் — ஒழுங்கு சீராக இருந்தால்தான் முதலீட்டாளர்களை ஈர்க்க முடியும் என்று கூறினார்.

ராஜஸ்தான் அரசு பல சவால்களை சந்தித்துவரும் போதிலும், சட்டம் — ஒழுங்கை பாதுகாப்பதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருவது பாராட்டத்தக்கது என்றும், இதனால், மாநிலத்தின் முதலீடுகள் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இம்மாநிலத்தில் தகுதியுள்ள இளைஞர்களுக்கு எவ்வித பரிந்துரையும் இன்றி நேர் வழியில் பணிகள் வழங்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

வெளிப்படைத் தன்மையுடனும், ஊழல் புகார் ஏதும் இன்றியும் பணி நியமனங்கள் நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ராஜஸ்தானில் பாரதிய நியாய சங்கிதா சட்டம் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளதாக அவர் கூறினார்.

உச்சநீதிமன்றம் வரை செல்லும் குற்றவியல் வழக்குகள்கூட மூன்றாண்டுகளுக்குள் முடிப்பதற்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த புதிய குற்றவியல் சட்டத்தால் தொடர்ந்து வாய்தாக்கள் அளிக்கப்படுவது குறைந்துள்ளதாகவும் திரு அமித் ஷா கூறினார்.

<<<<<>>>>>>

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் இன்று மாநில மற்றும் யூனியன் பிரதேச நிதியமைச்சர்களுடன் பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

புதுதில்லியில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி மற்றும் அமைச்சகத்தின் உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் இம்மாதம் **28**-ஆம் தேதி தொடங்குகிறது.

<<<<<>>>>>>

வழக்கறிஞர்கள் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சூரியகாந்த் தெரிவித்துள்ளார்.

சண்டிகரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், குற்றவியல் வழக்குகளில் தொழில்நுட்பத்தின் பயன்பாடு மிகவும் முக்கியமானது என்று கூறினார்.

நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்துவரும் நிலையில், வணிக வழக்குகள் அதிகரித்து வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

சைபர் குற்றங்கள் தொடர்பான வழங்கு விசாரணையில் தொழில்நுட்பத்தின் பங்கு முக்கியமானது என்றும், வழக்கறிஞர்கள் இதனை பயன்படுத்த வேண்டும் என்றும் தலைமை நீதிபதி திரு சூரியகாந்த் வலியுறுத்தினார்.

<<<<<>>>>>>

இந்திய கடற்படை லட்சத்தீவில் மருத்துவ முகாமை நாளை மறுநாள் தொடங்கி ஐந்து நாட்களுக்கு நடத்த உள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

கடற்படை தலைமை தளபதி தினேஷ் கே திரிபாதி இந்த மருத்துவ முகாமை தொடங்கிவைக்க உள்ளார்.

அகத்தி, கவரத்தி, அன்தரோத், அமீனீ, மினிகாய் தீவுகளில் மருத்துவ முகாம்கள் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

லட்சத்தீவு மக்களுக்கு மருத்துவ வசதிகளை அளிக்கும் வகையில், இந்திய கடற்படை இந்த முகாமினை நடத்த உள்ளது.

இதில், கடற்படை, விமானப்படை, ராணுவ மருத்துவ அலுவலர்கள் கலந்துகொண்டு மருத்துவ பரிசோதனை செய்து சிகிச்சை அளிக்க உள்ளனர்.

<<<<<>>>>>>

தேர்வு எழுதும் மாணவர்களின் அச்சத்தை களைவதற்கான பிரதமரின் பரிக்ஷா பே சர்ச்சா இயக்கத்தில் நடப்பாண்டில் நான்கு கோடிக்கும் மேற்பட்டோர் ஆன் லைனில் பதிவு செய்துள்ளதாக மத்திய கல்வித்துறை அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கடந்த ஆண்டு 3 கோடியே 50 லட்சம் பேர் பதிவு செய்து கின்னஸ் சாதனை நடப்பாண்டில் முறியடிக்கப்பட்டிருப்பதாக கூறியுள்ளார்.

தேசிய அளவிலான இந்த இயக்கம் மாணவர்களின் மன அழுத்தத்தை போக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

நடப்பாண்டு தேர்வு எழுதும் மாணவர்கள் அனைவரும் பரிக்ஷா பே சர்ச்சா இயக்கத்தில் பங்கு பெற்று தங்களது தேர்வுகளை எளிதாக எதிர்கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மன அழுத்தத்தை போக்குவதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வகுத்து தந்துள்ள நம்பிக்கையை வளர்ப்பது, கவனத்துடன் கற்றுக்கொள்வது, உடல் நலத்தை பராமரிப்பது உள்ளிட்டவற்றில் மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இவ்வாண்டும் பரிக்ஷா பே சர்ச்சா இயக்கத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பிரதமருடனான கலந்துரையாடலில் பங்குபெற்று பயன்பெறுமாறும் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

பிரதமரின் பாரம்பரிய விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், இயற்கை விவசாயம் மற்றும் பாரம்பரிய பயிர் ரகங்களின் விதைகளை

பாதுகாத்தல் உள்ளிட்ட பணிகள் நாடு முழுவதும் நடைபெற்ற வருகின்றன.

காரைக்கால் மாவட்டத்தின் வரிச்சிக்குடியை சேர்ந்த விவசாயி பாஸ்கர், விதை நெல் ரகங்களை பாதுகாக்கும் முயற்சியை கடந்த 17 ஆண்டுகளுக்கு மேலாக மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — விவசாயி — 28 Sec. )***

பாரம்பரிய நெல் ரகங்களை பாதுகாப்பதன் அவசியம் குறித்து நாகை வேளாண் கல்லூரி பேராசிரியர் திரு ஆனந்த் குமார் எடுத்துரைத்தார்.

***(Sound Byte — Professor— 32 Sec. )***

<<<<<>>>>>>

ஈரானில் அரசுக்கு எதிரான போராட்டம் 14-ஆவது நாளாக இன்றும் தொடர்கிறது.

முக்கியமான கட்டமைப்புகள், பொது சொத்துக்களை பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொண்டு வருவதாக ஈரான் ராணுவம் அறிவித்துள்ளது.

போராட்டக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்க்கூடாது என்று அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்த்யடுத்து ஈரான் ராணுவம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஈரானில் மக்கள் மேற்கொண்டுவரும் போராட்டத்தில் **50-**க்கும் மேற்பட்ட வங்கிகள், அரசு கட்டிடங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன.

இதுவரை, **50** போராட்டக்காரர்கள் உட்பட **65** பேர் உயரிழந்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போராட்டத்தில் ஈடுபட்ட **2** ஆயிரத்து **500-**க்கும் மேற்பட்டவர்களை பாதுகாப்புப்படையினர் கைது செய்துள்ளனர்.

போராட்டக்கார்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஈரான் அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

<<<<<>>>>>>

தென்மேற்கு வங்கக்கடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், மேற்கு — வடமேற்கு திசையில் நகர்ந்து இலங்கை முல்லைத் தீவு அருகே கரையை கடந்ததாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — செந்தாமரை கண்ணன் - 20 Sec.)***

<<<<<>>>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் ஆக்ராவில் இருந்து பங்களாதேஷை சேர்ந்த 28 பேரை அந்நாட்டுக்கு திருப்பி அனுப்பியதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

ஆக்ராவில் செய்தியாளர்களிடம் பேசிய காவல்துறை உதவி ஆணையர் திரு தினேஷ் சிங், எட்டு குழந்தைகள் உட்பட 38 பேர் செக்டர் 15 பகுதியில் சட்டவிரோதமாக வசித்து வந்ததாக கூறினார்.

இவர்களிடம் போதிய ஆவணங்கள் இல்லாத காரணத்தால், இந்த 38 பேரையும் பங்களாதேஷ் நாட்டுக்கு திருப்பி அனுப்பியதாக அவர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

மணிலாவில் நடைபெறும் பனிச்சறுக்குப் போட்டியில் இந்தியா 15 பதக்கங்களை வென்றுள்ளது.

இப்போட்டியில் இந்தியா 5 தங்கம், ஐந்து வெள்ளி, 5 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

---------------

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி 10 ரன் வித்தியாசத்தில் உத்தரப்பிரதேச அணியை வென்றது.

முதலில் பேட் செய்த குஜராத் அணி 20 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 207 ரன் எடுத்திருந்தது.

**பின்னர் 208 ரன் என்ற வெற்றி இலக்குடன் விளையாடிய உத்தரப்பிரதேச அணி 20 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 197 ரன் எடுத்து தோல்வியடைந்தது.**

**<<<<<END>>>>>**